# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,279—1962 අගෝස්තු 31 වැනි සිකුරාදා—1962.8.31

13,279 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது).


| | பக்கம் | | |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 496 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 493 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைச்சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கட்டடத் தொழிற் சம்பளச் சபையில் 1962 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ந் திகதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு அங்கம் வகித்தற்கு, பின்வரும் பேர்வழிகளை கனம் தொழில், தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டுச் சம்பளத் தீர்ப்புச் சங்க விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வி. சா. ம. த மெல்,
தொழில் தேசியமயசேவை மந்திரி
காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆு ஓகஸ்ட் மீ 22 ந் உ.

நியமன அங்கத்தவர்கள்

1. திரு. எல். எச். சுமணதாச
2. திரு. எச். சமரநாயக
3. திரு. சீ. சூரியகுமாரன்

முதலாளிகளின் பிரதிநிதிகள்

1. திரு. எம். எச். ஆர். அஸ்றபெரி
2. திரு. ஆர். பற்றிசன்
3. திரு. ஜே. டபிள்யூ. பி. மிடில்மிஸ்
4. திரு. ரீ. ஹட்டன்
5. திரு. டபிள்யூ. ஏ. டி. ராமநாயக
6. திரு. விம்லட் ஏ. வணிகசிங்க
7. திரு. பிரான்சிஸ் வணிகசேகர
8. திரு. டீ. ஜேசன் பர்ணுந்தோ
9. திரு. டீ. டீ. லொட்ஜ்
10. திரு. எல். ஏ. வணிகசிங்க

தொழிலாளரின் பிரதிநிதிகள்

1. திரு. எச். சீ. வெடிவர்த்தன
2. திரு. எம். கே. பி. ராஜபக்ஷ
3. திரு. உவால்றர் ஜோதிபால
4. திரு. எஸ். கே. அல்பேட்
5. திரு. சோமசிரி மீபாவெல
6. திரு. உவில்லியம் கல்லாகொட
7. திரு. என். சண்முகதாசன்
8. திரு. டீ. எஸ். பொன்சேகா
9. திரு. ஜி. பி. பெரேரா
10. திரு. தினதாச அஹாங்கமகே

L. D. B. 80/44
8—1145

---

### சம்பளச்சபைச் சட்டம்

#### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம் கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி பின்வரும் நியமனங்களை, செய்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டின் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(1) சிலிர்த்த தும்பு, மெத்தைத் தும்பு ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த திரு. வீ. டீ. பீ. பர்ணுந்து சம்பளச்சபைச் சட்டத்தின் 12 (2) ம் பிரிவின் பிரகாரம் குறித்த சபையினின்றும் தாமாக விலகியதாகக் கருதப்பட்டமையால் அவருக்குப் பதிலாக திரு. ஜே. டபிள்யு. பி. பெரேரா என்பவர் ;

(2) சிலிர்த்த தும்பு, மெத்தைத்தும்பு ஏற்றுமதித் தொழிற் சம்பளச் சபையில் தொழிலாளரின் பிரதிநிதியாக இருந்த கே. எம். பீ. ராஜபக்ஷ சம்பளச்சபைச் சட்டத்தின் 12 (2) ம் பிரிவின் பிரகாரம் குறித்த சபையினின்றும் தாமாக விலகியதாகக் கருதப்பட்டமையால் அவருக்குப் பதிலாக திரு. டபிள்யு. ஏ. தர்மசேன என்பவர் ;

(3) சிலிர்த்த தும்பு, மெத்தைத் தும்பு ஏற்றுமதித் தொழிற் சம்பளச்சபையில் தொழிலாளரின் பிரதிநிதியாக இருந்த திரு. ஆர். ஏ. சரணபால என்பவர் த மாக விலகியதால் அவருக்குப் பதிலாக திரு. எச். சீ. வெடிவர்த்தன என்பவர்.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரி
காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22 ந் தேதி.
8—1185.

---

### சம்பளச்சபைச் சட்டம்

#### அறிவித்தல்

உறைநீர், வளிநீர் உற்பத்தித்தொழிற் சம்பளச்சபை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 20 ம், 23 ம், 24 ம், 25 ம் பிரிவுகளின் பிரகாரம் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்களைச் செய்யவிருக்கும் தமது உத்தேசத்தைக் குறித்த சட்டத்தின் 28 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறது.

உத்தேசித்துள்ள தீர்மானங்களுக்கு ஆட்சேபனைகள் 1962 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ந் தேதி பகல் 12 மணி வரைக்கும் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனைகள் ஒவ்வொன்றும் எழுத்திற் தெரிவிக்கப்படுவதோடு, அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக்கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயுமிருத்தல் வேண்டும்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 27 ந் தேதி.

நெ. வி. அபயவீர,
உறைநீர், வளிநீர் உற்பத்தித்தொழிற் சம்பளச்சபைத் தலைவர்.

## அட்டவணை

### 1 ம் பகாம்

### 20 (2) (ஆ) ம் பிரிவின்கீழ் கட்டளை

1. விசேட சகாயப்பணம் தொழிலதிபரால் கணிக்கப்பட்டு மாதமொருமுறை வெளியிடப்படவேண்டும்.

2. யாதாயினுமொரு மாதத்தின் சாதாரண வேலைநாளுக்குரிய விசேட சகாயப்பணம், அம்மாதத்திற்கு நேரேமுந்திய மாதத்தின் வாழ்க்கைச் செலவுப்புள்ளியை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்படவேண்டும்.

### சாதாரண வேலைநாள் என்பதன் சொற்பொருள் விளக்கம் (24 ம் பிரிவு)

1. உறைநீர், உற்பித்தியில் ஈடுபட்டுள்ளோர் நீங்கலாக, உறைநீர், வளிநீர் உற்பத்தித் தொழிலிலுள்ள தொழிலாளருக்கு (சாப்பாட்டுக்கு ஒரு மணிநேரமுட்பட) ஒரு சாதாரண வேலைநாள் என்பது—
   (அ) ஒரு சனிக்கிழமையல்லாத நாளெதிலும் 9 மணி நேரத்தையும்
   (ஆ) ஒரு சனிக்கிழமையில் 6 மணி நேரத்தையும்

கொண்டதாயிருத்தல்வேண்டும்.

2. உறைநீர் உற்பத்தியிலீடுபட்டுள்ள தொழிலாளருக்கு (சாப்பாட்டுக்கு ஒரு மணிநேரமுட்பட) ஒரு சாதாரண வேலைநாள் என்பது—
   (அ) வாரத்தின் எவ்வைந்து நாட்களிலும் 9 மணிநேரத்தையும்
   (ஆ) வாரத்தின் எவ்வொரு நாளிலும் 6 மணிநேரத்தையும்.

கொண்டதாயிருத்தல்வேண்டும்.

### II ம் பாகம்

நேரவேலைக்குரிய இழெல்லைச் சம்பளவீதங்கள் இழேகுறிக்கப்பட்டவாறு—
(1) ஒரு மூலவீதத்தையும்
(2) ஒரு விசேட சகாயப்பணத்தையும் கொண்டதாயிருத்தல்வேண்டும்.

| 1 | 2 | 3 | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர் வகுப்பு | சாதாரண வேலை நாளுக் குரிய மூலவீதம் | யாதாயினுமொரு மாதத்தின் சாதாரண வேலை நாளுக்குரிய விசேட சகாயப் பணவீதம் | | |
| | | (அ) முந்தியமாதத் திற்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 100·1 ஆக இருக்குமிடத்து விசேட சகாயப்பணம் | (ஆ) முந்தியமாதத் திற்குரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 100·0 ஆக இருக்குமிடத்து விசேட சகாயப்பணம் | (இ) முந்தியமாதத்திற்குரிய வாழ்க்கைச் செலவுப்புள்ளி 100·1 க்குக் கூடுதலாக அல்லது 100·0 க்குக் குறைவாக இருக்குமிடத்து 100·1 க்குக் கூடுதலாக அல்லது 100·0 க்குக் குறைவாக இருக்கும் ஒவ்வொரு பூரண 1·8 புள்ளிகளுக்கும் (1·8 புள்ளிகளுக்குட்படின் கவனிக்கப்படமாட்டா) இழே முறைப்படி I ம், II ம் சூசிகளிற் காட்டப்பட்டவாறு, பின்னல் வரும் வீதங்களின் பிரகாரம் கணிக்கப்படும் ஒரு தொகையால், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, முற்போந்த 3 (அ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப்பண வீதம் அதிகரிக்கப்படும் அல்லது முற்போந்த 3 (ஆ) ம் பந்தியிற் கூறப்பட்ட விசேட சகாயப்பண வீதம் குறைக்கப்படும் |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| **I ம் இனம் :** கண்காணிமார், தலைமைப் பாணிவகை தயாரிப்போர், நீர்வடியந்திர இயக்குநர், குவளை செய்வோர், தச்சர், (இயந்திரத்தால்) நிரப்புவோர், சரி பார்ப்போர் .. | 2 0 | 2 10 | 2 7 | 0 3 |
| **II ம் இனம் :** குவளை பழுதுபார்ப்போர், கரியமிலவாயு கட்டுப்படுத்துவோர், உதவிப் பாணிவகை தயாரிப்போர், பாணிவகை நிரப்புவோர், அடைப்போர், கழுவிய போத்தல் பரிசோதகர், காபனேற்றர் இயக்குநர், உற்பத்தி கணக்கிடுவோர், (கையால்) நிரப்புவோர், (இயந்திரத்தால்) நாமவிலாசம் ஒட்டுவோர், கழுவிநிரப்பிய போத்தல்களை அகற்றுவோர், தாதுவர்க்கநீர் அல்லது வளிநீர் உற்பத்திசெய்வதில் தாமாக இயங்கும் இயந்திரங்களை இயக்கும் மற்றும் எத்தொழிலாளரும், உறைநீர் அகற்றுவோர் .. .. | 1 65 | 2 10 | 2 7 | 0 3 |
| **III ம் இனம் :** உறைநீர் சேகரிப்போர், உறைநீர் கட்டியனுப்புவோர், உறைநீர் ஏற்றுவோர், பாணியறைத் தொழிலாளர், போத்தல் கட்டவிழ்ப்போர், போத்தல் வகைப்படுத்துவோர், அல்லது சுத்திகரிப்போர், கழுவிநிரப்புதற்குப் போத்தல்களை இடுவோர், பெட்டி நிரப்புவோர், போத்தல் அடுக்குவோர், சுத்திகரிப்போர் அல்லது கட்டுவோர், கையாற் கழுவுவோர், பெட்டி தூக்குவோர் அல்லது அடுக்குவோர், பண்டகசாலைத் தொழிலாளர், கையால் நாமவிலாசம் ஒட்டுவோர், வானில் ஏற்றுவோர் .. .. .. | 1 40 | 2 0 | 1 97 | 0 3 |

## மேலே 3 (இ) ம் பத்தியிற் குறிக்கப்பட்டுள்ள கட்டளைகளை இயைபுபடுத்திக்காட்டும் சூசிகள்

### I ம் சூசி

வாழ்க்கைச் செலவுப்புள்ளி அதிகரிப்பின் கொடுபடவேண்டிய விசேட சகாயப்பணம்

| செலவுப் புள்ளிகள் | I ம் இனம், II ம் இனம் | III ம் இனம் |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச |
| 100·1—101·8 .. .. .. | 2 10 .. | 2 0 |
| 101·9—103·6 .. .. .. | 2 13 .. | 2 3 |
| 103·7—105·4 .. .. .. | 2 16 .. | 2 6 |
| 105·5—107·2 .. .. .. | 2 19 .. | 2 9 |
| 107·3—109·0 .. .. .. | 2 22 .. | 2 12 |

### II ம் சூசி

வாழ்க்கைச் செலவுப்புள்ளி குறையின் கொடுபடவேண்டிய விசேட சகாயப்பணம்

| | | |
|---|---|---|
| 100·0—98·3 .. .. .. | 2 7 .. | 1 97 |
| 98·2—96·5 .. .. .. | 2 4 .. | 1 94 |
| 96·4—94·7 .. .. .. | 2 1 .. | 1 91 |
| 94·6—92·9 .. .. .. | 1 98 .. | 1 88 |
| 92·8—91·1 .. .. .. | 1 95 .. | 1 85 |

### III ம் பாகம்

### மேலதிக நேரச்சம்பள வீதம்

சாதாரண வேலைநாளுக்கு மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொருமணிநேர வேலைக்குமுரிய கீழெல்லை மேலதிகநேரச் சம்பளவீதம் (கீழெல்லை நாளாந்தர வீதத்தை 8 ஆற் பிரிக்கவரும்) கீழெல்லை மணிநேரவீதத்தை நூற்றுக்கு 50 வீதம் அதிகரிக்கவரும் தொகையாகும். சாதாரண வேலைநாளுக்கு மேலதிகமாகச் செய்யும் ஒரு மணிநேர வேலையின் எப்பாகத்திற்கும் விகிதசமப்படி கீழெல்லை மேலதிக நேரச்சம்பளவீதம் கணிக்கப்பட வேண்டும்.

### IV ம் பாகம்

### வாராந்தர விடுமுறைநாள் (24 ம் பிரிவு)

ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் தொழிலாளர் யாவருக்கும் வாரத்தில் யாதாயினும் ஒரு நாளை வராந்தர விடுமுறை நாளாகக் கொடுத்தல்வேண்டும் :

ஆயினும், பின்வரும் நிபந்தனைகளுக்கமைய அத்தகைய விடுமுறைநாளில் எத்தொழிலாளருக்கும் முதலாளி வேலை கொடுக்கலாம் :—

(1) அத்தகைய வாராந்தர விடுமுறைநாளுக்கு நேரடுத்துவரும் ஆறு நாட்களுள் ஒரு நாள் அத்தொழிலாளருக்கு ஒரு விடுமுறை நாளாகக் கொடுக்கப்படுதல்வேண்டும் ;

(2) வாராந்தர விடுமுறைநாளில் செய்யும் வேலைக்கு ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கீழெல்லைச் சம்பளவீதத்துடன்—
(அ) (சாப்பாட்டுக்கு ஒரு மணிநேரமுட்பட) முதல் 9 மணி நேரத்திற்கும் அத்தகைய கீழெல்லை வீதத்தின் 100 க்கு 50 வீதமும் ;
(ஆ) அதற்குப்பிந்திய ஒவ்வொரு மணிநேர வேலைக்கும் (நாளாந்தர கீழெல்லை நேரவீதத்தை 8 ஆல் பிரிக்கவரும்) கீழெல்லை மணித்தியால வீதத்தின் 100 க்கு 100 வீதமும் வேதனமாகச் சேர்த்துக்கொடுக்கப்படவேண்டும்.

(3) எக்காலத்திலும் வாராந்தர விடுமுறைநாளில் செய்யப்படும் வேலைக்கு தொழிலாளர் ஒருவருக்குரிய வேதனம் அக்காலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்துடன் சேர்த்துக்கொடுக்கப்படவேண்டும்.

### V ம் பாகம்

### ஆண்டு விடுமுறைநாட்கள் (25 ம் பிரிவு)

1. (இதனகத்துப்பின்னர் " தகுதிப்படுத்தும் ஆண்டு " எனப்படும்) எவ்வாண்டிலும் தொழிலாளர் ஒருவர், ஒரே முதலாளியின்கீழ் 232 நாட்களுக்குமேற்படத் தொடர்ச்சியாக வேலைசெய்திருப்பின், 232 நாட்களுக்கு மேற்பட அவர் வேலைசெய்த ஒவ்வொரு பூரண 4 நாட்களுக்கும் ஒரு விடுமுறைநாள் வீதம் கணிக்கப்பட்டு, குறித்த தொழிலாளருக்கு விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் நேரடுத்துவரும் ஆண்டிற் கொடுக்கப்படவேண்டும்.

ஆயினும், 288 நாட்களுக்கு மேற்பட்ட எவ்வேலைக்காலத்திற்கும் அத்தகைய விடுமுறைநாள் எதையும் முதலாளியொருவர் கொடுக்கக் கடமைப்பட்டவரன்று.

இப்பந்தியில், " தொழிலாளர் வேலைசெய்த நாட்கள் " என்பது பின்வருவனவற்றைக் கொண்டதாகும்—

(அ) கவனிக்கப்படும் எவ்வாண்டிலும், (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 25 ம் பிரிவின் பிரகாரம் அத்தொழிலாளருக்கு முதலாளி கொடுத்த விடுமுறை நாளொவ்வொன்றும் ;

(ஆ) முதலாளி அனுமதித்த எக்காரணத்தின் பொருட்டும் வேலைக்கு வராதநாள் ஒவ்வொன்றும் ;

(இ) தமது வேலை காரணமாகவும், தாம் வேலைசெய்துகொண்டிருக்கும் பொழுது ஏற்படும் ஒரு விபத்தின் காரணமாகவும் அத்தொழிலாளருக்கு நேர்ந்த எக்காயத்தின்பொருட்டும் வேலைக்குவராத நாள் ஒவ்வொன்றும் ;

(ஈ) (139 ம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டத்தின் III ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட தொழிலின் பயனாக யாதாயினுமொரு நோய் காரணமாக வேலைக்கு வராதநாள் ஒவ்வொன்றும் ;

(உ) முதலாளி தொழிலாளருக்கு வேலை கொடுக்கத்தவறும் நாள் ஒவ்வொன்றும் ;

(ஊ) எவ்வாண்டிலாயினும் மொத்தம் 30 நாட்களுக்கு மேற்படாத சட்டவிரோதமற்றதல்லாத வேலைநிறுத்தம் அல்லது கதவடைப்புக் காரணமாக வேலைக்குவராத நாளொவ்வொன்றும் ;

ஆனால், 24 ம் பிரிவின் பிரகாரம் வாராந்தர விடுமுறைநாளாக நியமிக்கப்பட்ட நாளைக் கொண்டதாகாது.

2. (i) ஒரு தொழிலாளருக்கு உரித்தான விடுமுறைநாட்களின் தொகை ஏழுக்கு மேற்படாதிருப்பின், அத்தகைய தொழிலாளருக்கு அவ்விடுமுறைநாட்கள் தொடர்ச்சியான நாட்களில் கொடுக்கப்படவேண்டும். அவர் அவ்விடுமுறைநாட்களைத் தொடர்ச்சியான நாட்களில் எடுத்தல் வேண்டும்.

(ii) ஒரு தொழிலாளருக்கு உரித்தான விடுமுறைநாட்களின் தொகை ஏழுக்கு மேற்படின், அத்தகைய தொழிலாளருக்கு அவ்விடுமுறை நாட்களில் ஏழுநாட்கள் தொடர்ச்சியான நாட்களில் கொடுக்கப்படவேண்டும். அவர் அவ்வேழுநாட்களையும் தொடர்ச்சியான நாட்களில் எடுத்தல் வேண்டும்.

3. 2 ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய ஒரு தொழிலாளரும் அவரது முதலாளியும் பரஸ்பரம் சம்மதித்துக்கொள்ளும் நாளில் அல்லது நாட்களில் அத்தொழிலாளருக்கு விடுமுறைநாள் அல்லது விடுமுறைநாட்கள் கொடுக்கப்படவேண்டும்.

4. விடுமுறைநாள் ஒவ்வொன்றுக்கும் கொடுக்கப்படவேண்டிய வேதனம் தகுதிப்படுத்தும் ஆண்டின் கடைசி 60 நாட்களில் அத்தொழிலாளர் உண்மையாக வேலைசெய்த நாட்களுக்கு அவர் சம்பாதித்த மேலதிகநேரச் சம்பளமும் நன்னரும் (போனஸும்) நீங்கலான மொத்தச் சம்பளத்தை அத்தகையநாட்களின் தொகையால் பிரிக்கவரும் சராசரி நாட்சம்பளமாகும்.

5. ஒரு தொழிலாளர் ஒருவருக்கு அவரது விடுமுறைநாளுக்கு அல்லது விடுமுறை நாட்களுக்குரிய வேதனம் அத்தகைய விடுமுறைநாளுக்கு அல்லது விடுமுறைநாட்களுக்கு முன்னர் கொடுக்கப்படவேண்டும். ஆனால், அத்தகைய விடுமுறைநாளுக்கு அல்லது விடுமுறைநாட்களுக்குமுன் ஏழுநாட்களுக்கு முந்தாவண்ணம் கொடுக்கப்படலாகாது.

அரசாங்க விடுமுறைநாட்கள் (25 ம் பிரிவு)

1. (அ) இப்பந்தியினதும் 2 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலைபார்க்கும் தொழிலாளர் யாவருக்கும் (177 ம் அத்தியாயமாகிய) விடுமுறைச்சட்டத்தின் கருத்துக்கமையப் பின்வரும் அரசாங்க விடுமுறை நாட்களை வேதனத்துடன் விடுமுறைநாட்களாகக் கொடுத்தல்வேண்டும் :—

(1) தமிழ்த் தைப்பொங்கல் தினம் ;
(2) சுதந்திர ஞாபகார்த்த தினம் (பெப்ருவரி 4 ந் தேதி) ;
(3) சிங்கள, இந்து புத்தாண்டு தினம் ;
(4) மே தினம் (மே மாதம் 1 ந் தேதி) ;
(5) சிங்கள விசாக மாதத்தின் பௌர்ணமி தினம் ;
(6) மொஹமத் நபிகள் பிறந்த தினம் (மீலாத் உன்-நபி சல்) ;
(7) கிறிஸ்மஸ் தினம்.

(ஆ) இப்பந்தியின் (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட அரசாங்க விடுமுறைநாளொன்று தொழிலாளரொருவர் வேலைநிறுத்தத்திலீடுபடும் காலமெதிலும் நிகழுமிடத்து, அவ்வுபப்பந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய தொழிலாளருக்குப்பொருந்தா.

(இ) முற்போந்த (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட அத்தகைய விடுமுறைநாள் ஒவ்வொன்றுக்கும் தொழிலாளரொருவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய வேதனம், அத்தகைய விடுமுறைநாள் நிகழும் ஒரு சாதாரண வேலைநாளுக்குக் கொடுக்கப்படவேண்டிய கிழெல்லைச்சம்பள வீதத்திற்குக் குறையாதிருத்தல்வேண்டும்.

2. ஆயினும், முதலாளி ஒருவர் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய முற்போந்த பந்தியிற் குறிக்கப்பட்டுள்ள அரசாங்க விடுமுறைநாளெதிலும் தொழிலாளரெவருக்கும் வேலைகொடுக்கலாம் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறைநாளுக்கு நேரடுத்துவரும் டிசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளான்று அல்லது அதற்குமுன் ஒருநாள் விடுமுறைநாளாக, பதில் விடுமுறைநாள் கொடுக்கப்படும் மாதத்தில் ஒரு சாதாரண வேலைநாளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கீழெல்லைநாளாந்தரச் சம்பளவீதத்திற்குக் குறையாத வீதப்படியுள்ள வேதனத்துடன் தொழிலாளருக்குக் கொடுக்கப்பட வேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய அரசாங்க விடுமுறைநாளெதிலும் செய்யும் வேலைக்கு, சாதாரண வேலைநாள் கொண்ட மணித்தியாலங்களின் தொகையின்போது செய்யப்படும் வேலைக்குரிய கீழெல்லை நாளாந்தரச் சம்பளவீதத்தின் இருமடங்குக்குக் குறையாத வீதப்படியும், ஒரு சாதாரண வேலைநாள் கொண்ட மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமாகச் செய்யும் வேலைக்கு (கீழெல்லை நாளாந்தர வீதத்தை 8 ஆற் பிரிக்கவரும்) சாதாரண மணித்தியாலவீதத்தின் மும்மடங்குக்குக் குறையாத வீதப்படியும் (அத்தகைய மணிநேரத்தின் பாகத்திற்செய்யும் வேலைக்கு விகிதசமப்படியும்) அத்தொழிலாளருக்கு வேதனம் கொடுக்கப்படவேண்டும்.

8–1280

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### ஈட்டுச் சட்டம்

(89 ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 3 (இ) 114 (2) ஆகிய பிரிவுகளின்படி எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, வர்த்தக அதிபராகிய கினிகே றிச்சாட் வால்ரர் டி சில்வா ஆகிய நான், அச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கொலெற்ஸ் பி(f)னன்ஸ் லிமிடெட் தாபனத்தை அங்கோரம் பெற்ற நிதி உதவும் ஒரு தாபனமாக இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

ஜீ. ஆர். டபிள்யூ. டி சில்வா,
வர்த்தக அதிபர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஓகஸ்ற் மீ 15 ந் உ.

8—1050

### அறிவித்தல்

ஹிங்குருக்கொடையிலுள்ள வாடி வீட்டிற்கு திருத்தங்கள் செய்ய இருப்பதால், 5.9.62 முதல் 20.9.62 வரை (இரு திகதிகள் உட்பட) பொதுசன பாவிப்பிற்கு மூடப்பட்டிருக்கும் என, இத்தால் அறிவிக்கிறேன்.

கா. கந்தசாமி,
பொல்லநறுவை மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, பொல்லநறுவை,
1962 ம் ஆண்டு ஆவணி மீ 25 ந் உ.

8—1292

### யாத்திரிகை விதிமுறை

சித்தாண்டி சித்திரவேலாயுதசுவாமி ஆலயத் திருவிழா—1962
மட்டக்களப்பு மாவட்டம்

இக்கோயில்த் திருவிழாவுக்குச் சமுகம் கொடுக்கும் யாத்திரிகர்கட்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கட்கும் அறிவிப்பது யாதெனில் :—

மேற்கூறிய ஆலயத்திருவிழா 1962 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 31 ம் திகதி ஆரம்பமாகி 1962 ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 15 ந் திகதி முடிவடையும்.

இதில் பங்குபற்றும் யாத்திரிகர்கட்கும் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கட்கும்—1962 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ந் திகதி இல. 10,434 க் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் நடைமுறை விதிகள் :—ஆலயத் திருவிழா முடிவடையும் வரை அமுலில் இருக்கும்.

டி. அலுவிகார,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, மட்டக்களப்பு,
1962 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ந் திகதி.

8—1310

**வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.**

**வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.**

**அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.